மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :—தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக, சுற்றுப்புறச் சூழல் துறை மூலமாக ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடு படும். நிதி ஒதுக்கீட்டை பொறுத்தவரையிலும் ஒட்டு மொத்தமாக அந்தப் பகுதிக்கு, தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கப் படுகிற நிதி, அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் அத்தனைபேரும் சேர்ந்து அந்தந்த பணிகளுக்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்கிறார்கள். அப்படி ஒதுக்கீடு செய்கிறபோது சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவார்களேயானால் அதனை அந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். தேவைப்பட்டால் அரசு இதில் தலையிடும்.

கிண்டியிலுள்ள காமராஜர் நினைவாலயம்

கு.கா.வினா எண் 10—(*வினா எண். 9139) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :—மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினை வாலயம் சரிவர பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) கிண்டியிலுள்ள காமராஜ் நினைவாலயம் பராமரிக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்ற 13–4–1986ஆம் நாளன்று எங்கள் கட்சியின் மாநிலத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. இரா. செழியன் அவர்கள் கிண்டியிலுள்ள காம ராஜர் நினைவாலயத்திற்கு மலர் வளையம் வைக்கச் சென்றிருந்த போது நினைவாலயத்தின் முன்னாலே இருந்த கேட் உடைந்து போன நிலையில் இருந்தது. புல்வெளிகள் காய்ந்து போயிருந் தன. அங்கே எந்தவிதமான பராமரிப்பும் இல்லை. நினை வாலயம் ஒட்டடை அடைந்து போய் கவனிக்கப்படாத நிலையில் இருந்தது. இந்த நிலை குறித்து ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் தபால் மூலமாக மாண்புமிகு அறநிலையத் துறை

அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நினைவாலயம் நல்ல முறையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நினைவாலயத்தை பார்த்து நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஜனதா கட்சியின் தலைவரோ அல்லது வேறு யாராவதோ இது போன்ற குற்றச்சாட்டை எழுத்து மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாக தெரியவில்லை. காமராசர் நினைவாலயத்தைத் பராமரிக்க இரவு காவலர் ஒருவரும், பகல் காவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது நீங்கலாக தோட்டம், புல் வெளிகளைப் பராமரிக்க மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த நினைவாலயத்தைப் பராமரிக்க இரவும், பகலும் பணியாளர்கள் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறையில்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். மற்றபடி நினைவாலயத்தில் ஓட்டடை அடிக்கப்படவில்லை போன்ற சிறுசிறு குறைபாடுகள் இருக்குமானால் அவற்றை களைவதில் இந்த அரசுக்கு ஆட்சேபணை கிடையாது. நேரிடையாகப் பார்வையிட்டு இந்த சின்ன சின்ன குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதெல்லாம் நான் செய்யக் கூடிய நிலையில் உள்ளவை தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் நானும் அவர்களும் ஒன்றாக சேர்ந்து அந்த இடத்தைப் பார்வையிட முடியும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கிண்டியில் உள்ள காமராசர் நினைவாலயத்தின் பராமரிப்பு குறித்து தமிழ் நாடு ஜனதா கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய செழியன் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அவர்கள் அங்கே மலர் வளையம் வைத்து வணங்குவதற்குச் சென்றிருந்தபோது நினைவாலயம் சரியாக பராமரிக்கப்படவில்லை என்கிற கருத்தை எழுதியிருக்கிறார்கள். அந்த நினைவுப் பகுதிகள் செய்தித் துறையின் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள் இடத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே இதன் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்களில் அங்கே பணியாற்றிக் கொண்டு இருப்பவர்களிடத்திலே விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் சில விவரங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தக் குறைபாடுகள் இனிமேல் சரி செய்யப்படும்: குறைபாடுகள் இனிமேல் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு

பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நேரடியாக தொடர்பு இல்லாத காரணத்தாலும் எப்படியோ இந்தக் கேள்வி அவர்களுக்குப் போய்விட்ட காரணத்தாலும் முழுமையான தகவலை அவர்கள் இங்கே தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். காமராஜ் அவர்களும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர். ஆனால் அண்ணா நினைவாலயத்தைப் பராமரிக்கும் அளவிற்கு, காமராஜ் நினைவு ஆலயத்தை அரசு பராமரிக்கவில்லை என்பது எங்களுடைய கருத்து. எனவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி வேண்டாம்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கவிஞர் இரபீந்திரநாத் தாகூருக்குப் புகழஞ்சலி.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்திய துணைக் கண்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் விதத்தில் பல தீய சக்திகள் சில மாநிலங்களில் முயற்சிகளை மேற்கொண்டு உள்ள இந்த நேரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்காக நம்முடைய நாட்டிலே, வாழ்ந்த, தேசிய கீதத்தை இயற்றிய இரபீந்திரநாத் தாகூர் அவர்களின் 125ஆவது பிறந்த நாள் இன்று. எனவே இந்த நாளை நினைவு கூறும் விதத்தில், ஒருமைப்பாட்டை பெரிதும் விரும்புகிற, ஆதரிக்கிற நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த மாநில அரசின் சார்பில் இந்த மன்றத்தின் சார்பில், இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிற விதத்திலே கருத்துக்களை வெளியிட வேண்டுமென நான் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் புகழ்பெற்ற வங்க மகா கவிஞரும், நாட்டுப்பற்று மிக்க நாவலரும், தேசப்பிதா காந்தியடிகளுக்கு 'மகாத்மா' என்ற பெயரை சூட்டியவரும், தேசப் பிதா காந்தி